பக்கங்கள்: நான்கு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

அடர்: 6 பிரசோற்பத்தி ஞூ வைகாசி மீ 17 உ வெள்ளிக்கிழமை [31—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 178

# பிரிட்டன்-ஸ்ரீலங்கா உறவில் நெருக்கடி!

## ஹிளாட்ஸ்ரோன் விவகாரத்தினால் சிக்கல்

கொழும்பு, மே 31

பிரிட்டன் தூதர் டேவிட்கிளாட்ஸ்ரோனின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பாக பிரிட்டிஷ் அரசுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடும் நெருக்கடி நிலையும் உருவாகியிருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது தூதர் கிளாட்ஸ்ரோன் தூதரக மற்றும் ராஜ்ய உறவு முறைகளுக்கும் மரபுகளுக்கும் முரணாக நடந்திருப்பதாக ஸ்ரீலங்கா அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இதனைப்படுத்து திரு. கிளாட்ஸ்ரோன் ஸ்ரீலங்கா வினால் விரும்பப்படாத நபர் என்று ஸ்ரீலங்கா அரசு நேற்று

**மற்றுமொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்**

உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

திரு. கிளாட்ஸ்ரோன் நாட்டைவிட்டு வெளியேற ஸ்ரீலங்கா அரசு காலக்கெடு ஏதும் விதிக்கவில்லை என்றும்—

எனினும் அவரை ஸ்ரீலங்கா அரசு பிரிட்டனின் தூதராகக் கருதாது என்றும் ஸ்ரீலங்காவின் வெளியுறவுச் செயலாளர் வெளிநாட்டு நிருபர்களை நேற்று செய்தியாளர் மாநாட்டில் வைத்து அறிவித்தார்.

ராஜ்ய மரபுகளை மீறியதற்
[3 ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய புலனாய்வுக் குழு கொழும்பு வந்தது!

கொழும்பு, மே 31

இந்தியப் புலனாய்வுத் துறை இயக்குநர் விஜய்கரண் மற்றும் இரட்டு புலனாய்வுக் குழுவின் தலைவர் திரு. கார்த்திகேயன் உட்பட மூவர் கொண்ட புலனாய்வுக் குழு ஒன்று நேற்று கொழும்பு வந்து சேர்ந்தது.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவே இந்தியக்குழு இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-ன]

## ராஜீவ் உயிரிழப்பார் என கோபாலசாமி கூறினாரா?

### தமிழகத்தில் புதிய சர்ச்சை

சென்னை மே 31

"ஸ்திரமான ஆட்சி அமைக்க ராஜீவ் காந்தி உயிரோடு இருக்க மாட்டார்" என்று ராஜீவ் உயிரிழப்பதற்கு முன்னரே தி. மு. க. வைச் சேர்ந்த ராஜ்ய சபை எம். பி. திரு. வை. கோபாலசாமி பகிரங்கமாக கூறியிருந்தாரா?

—இவ்வாறு தற்போது சர்ச்சை கிளப்பப்பட்டிருக்கிறது.

திரு. கோபாலசாமி இப்படிக் கூறியதாக காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றச்சாட்டு வெளியிட்டிருக்கிறார்.

இந்த விடயம் குறித்து செய்தியாளர்களிடம் விளக்கமளித்த தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி "திரு. கோபாலசாமி அப்படிக் கூறியிருந்தால் அது கண்டிக்கத்தக்கது" என்றார்.

திரு. கோபாலசாமி தம்முடன் தொலைபேசியில் தொடர்புகொண்டதாகவும் - அப்படி பேசவில்லை என்று திரு. கோபாலசாமி அப்போது தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் மேலும் சொன்னார். [உ-ன]

## கடும் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

### செயலகத்துக்கு பணம் வந்துள்ளது

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இறந்த, ஊனமுற்றவர்களின் குடும்பங்களுக்கு [கடும் பாதிப்புற்றோருக்கு] நஷ்டஈடு வழங்கவென மேலும் 6 கோடி ரூபா நேற்று செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

நஷ்டஈடு வழங்குவதற்கு கடந்த வாரத்திலும் 8 கோடி ரூபா கிடைத்திருந்தது தெரிந்ததே.

பணம் இல்லாததால் கடந்த இரு மாதங்களாக நஷ்டஈடு வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

ஓரளவு பணம் வந்து சேர்ந்துவிட்டதால், 1987 ஆம் ஆண்டு தொடக்கம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு கட்டங்கட்டமாக நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. [ஒ-ன]

## பேசாலை முகாம் அகதிகளை விடுவிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 31

பேசாலை அகதி முகாமில் இருந்து கடந்த 24 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஏழு தமிழர்களையும் விடுதலைசெய்யுமாறு ஐ. நா. அகதிகள் தூதரகம் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யூ. டி. கிளார்க் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் நேரடியாகக் கோரியுள்ளார்.

பேசாலை முகாமுக்கு பொறுப்பான அதிகாரியின் அனுமதியுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. [ஒ-ன]

## முச்சந்தி முரளி



தூதர் விசயம் பாரதூரமாய் போச்சுது கண்டீங்களோ ......!

## எமது நிலையைத் தெளிவுபடுத்தி விட்டோம்:

# பேச்சுவார்த்தை நடத்துவது அரசைப் பொறுத்தது!

### யோகி பேட்டி

லண்டன், மே 31

"நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு நாம் தயார் என்பதை நாங்கள் தெளிவுபடக் கூறிவிட்டோம். இனி மேல் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமா இல்லையா என்பது ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்த விடயம்."

—இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார். அந்தப் பேட்டியின் முக்கிய அம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அரசு - புலிகள் பேச்சு விரைவில் ஆரம்பமாகலாம்

### பி. பி. ஸி. செய்தியாளர் கருத்து

கொழும்பு, மே 31

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகலாம் என்ற நம்பிக்கை கடந்த வாரங்களில் எழுந்திருப்பதாக பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸ் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றி கவனத்துக்கெடுத்து வருவதாக ஸ்ரீலங்கா அரசின் உயர் அதிகாரி ஒருவர் விரைவில் யாழ்ப்பாணம் போகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தமது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கிடையில்—

"ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கைது

யாழ்ப்பாணம், மே 31

விடுதலைப் புலிகளின் வேறு ஜன அமைப்பு ஒன்றின் உறுப்பினராக ஊடுருவியிருந்த—கொழும்புடன் தொடர்புடைய—நபர் ஒருவர் புலிகளினால் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பல ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் இவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை அடுத்து வேறு சில நபர்களையும் புலிகள் கைது செய்திருப்பதாகத் தெரியவந்தது. [உ]

# முல்லைத்தீவில் நேற்று கடும் மோதல்

# 5 படையினர் பலி! ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மே. 31

முல்லைத்தீவில் நேற்று அதிகாலை ஸ்ரீலங்கா படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் மூண்டன.

திடீரென்று வெடித்த இந்த மோதலில் ஐந்து படையினர் உயிரிழந்தனர் என்றும், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கரையோர முகாம் காவல் அரண்களில் இருந்து வெளியேறி முன்னேற முயன்ற படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் இரண்டரை மணி நேரம் இரு தரப்புக்கும் இடையே கடும் சமர் நடந்தது. இறுதியில் படையினர் பின்வாங்கி முகாம் திரும்பினர்.

விடுதலைப் புலிகள் தரப்பில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், மே 31

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினர் பல்வேறு பகுதிகளிலும் நாளாந்தம் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 26 ஆம் திகதி கொக்குவில் பகுதியைச் சுற்றிவளைத்த படையினரும், செலோரினரும் கோ. கிருஷ்ணமூர்த்தி, சி. பகஸ்கரன் ஆகிய இரு இளைஞர்களையும் மற்றோர் இளைஞரையும் கைது செய்தனர்.

ஆயித்தியமலை முகாமைச் சேர்ந்த படையினர் கரவெட்டிப் பகுதியில் பதுங்கியிருந்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பாரதிய ஜனதா முக்கியஸ்தர் சுட்டுக் கொலை

சண்டிகார், மே 31

பஞ்சாப் மாநிலத்தில் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. பி. ஜே. குப்தா என்பவர் அடையாளந்தெரியாத இருவரால் அவரது வீட்டு வாசலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். [ஓ-ன]

## தாண்டிக்குளம் பகுதியில் நேற்று பயணிகள் மீது சூடு!

யாழ்ப்பாணம், மே 31

நேற்றுக்காலை 9.30 மணியளவில் தாண்டிக்குளம் தடைமுகாமிற்கும் பேயாடிகூழாங்குளம் பகுதிக்கும் இடையில் பயணிகள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் சில பயணிகள் காயமடைந்தனர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் சிலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இச்சம்பவத்தில் காயமுற்ற எம்றோஸ் சுபிசியஸ் [வயது 59 - மடு அகதி முகாம்] தேவதாஸ் ஜோண்சன் [வயது 22 - யாழ். மத்தியூஸ் வீதி] ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [உ-3-15]

## ஆட்சி ஏற்றதும் உதவுவதாக 'ஜெயா' புலிகளுக்கு தூது!

### இந்து நாளிதழ் வெளியிட்ட தகவல்

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தால் புலிகளுக்கு உதவுவதாக கூறி அந்த இயக்கத்துக்கு அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தூது அனுப்பியிருந்தார்.

சென்னையில் இருந்து வெளிவரும் இந்து நாளிதழ் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ராஜீவ் கொலை குறித்த விசாரணை நடத்திவரும் விசாரணைக் குழுவுக்கு புதிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும்—

கொலை தொடர்பாக ஆழமான சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்ததாகவும்—

மர்மப் பெண் ஒருவர் சம்பந்தம் பட்டமை சிறிய தகவல்தான் என்றும் இந்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-8]

## மாந்தையில்

மன்னார் மாவட்டம், மாந்தை இராணுவ முகாமில் இருந்து சேற்றுக்குளம் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையினரை நேற்று விடுதலைப் புலிகள் தாக்கி திருப்பி அனுப்பினர். [ஓ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன ஆடு குட்டியுடன், ஒரு கோழிக்கூடு, ஒரு நாய்க்கூடு, ஒரு சதுமாரி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இல. 17, மாட்டின் றோட், யாழ்ப்பாணம்.
[4112]

### யந்திரம்

கோவில்களுக்கு வேண்டிய எல்லா யந்திரங்களும், வியாபார விருத்தி, கல்வி விருத்தி, விவாகத்தடை நிவர்த்திக்கும், கண்ணூறு, நாவூறு நீங்கும் யந்திரங்கள் எம்மிடம் பெறலாம். நிவாரணம் பெறாவிட்டால் பணம் திரும்பும் பத உத்தரவாதம். ஸ்ரீ மாவை வித்துவர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, அரசடிச் சந்தி, நல்லூர்.
[16937]

### மணமகன் தேவை

Non R. C 33 வயது படித்த மணப்பெண்ணுக்கும், 34 வயது உத்தியோகத்தர் ஆசிரியைக்கும் 32 வயது குற்றமில்லாத ஆசிரியைக்கும் தேவை. எம்மிடம் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[16946]

### இரசாயனம்

A/L 91 இரசாயனம் வினா-விடை வகுப்பு ஆரம்பம் 1-6-91 சனி 4-30 p. m சனி ஞாயிறு 4 30 p. m சனி, ஞாயிறு 2 00 p. m சமநிலை ஆரம்பம் ஆசிரியர் சந்திக், 108, [illegible] வீதி
[16933]

### மணப்பெண் தேவை

யாழ் நொமன் கத்தோலிக்க சதியுடன் 27 வயது வெளிநாடு கூட்டிச் செல்லும் மணமகனுக்கும், யாழ். இந்து கொத்தமுள்ள 37 வயது மாதம் 6000/- வருமானம் உடைய அரசாங்க உத்தியோகத்தருக்கும், குற்றமுள்ள சைவ 33 வயது சிவில் எஞ்சினியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[16945]

### மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாண இந்து 29 வயது செவ்வாய்க் குற்றமற்ற B Sc. M Sc இலங்கை வளாக விரிவுரையாளருக்கும், 31 வயது U. K M Sc க்கும் குற்றமுள்ள B Sc சிவில் எஞ்சினியருக்கும், 32 வயதுள்ள குற்றமற்ற சைவ பட்டதாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்.
[16944]

### புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆண்டு 5)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (மூன்றாவது) 2 6-1991 ஞாயிறு மு ப 8-00, மு ப 10-30. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் பி ப 4 00 (மக்கள் வைத்தியசாலை முன்பாக) குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியில், நடைபெறும் பதிவு செய்யவும் புலமைப் பரிசில் Paper Class ஆரம்பமாகியுள்ளது ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
[16927]

---

உ

முருகன் துணை

# உபநயன அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரசோற்பத்தி வருடம் வைகாசி மாதம் 19 ஆம் நாள் (02-06 91) ஞாயிற்றுக்கிழமை காலை 6-00 மணியின் மேல் வரும் சுப வேளையில்

எமது புத்திரன்

## சிரஞ்சீவி உமாசுதசர்மா

அவர்களுக்கு

மயிலணி முருகன் துணைகொண்டு மேற்படி ஆலயத்தில் உபநயன வைபவம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் தாங்கள் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்:
வரதராஜேஸ்வரசர்மா
தம்பதிகள்.

மயிலணி. சுன்னாகம்.
[16917]

---

# 7 ஆம் மாத நினைவஞ்சலி

## மார்க்கண்டு மதனராஜா

(ஓய்வுபெற்ற [illegible] பேராதனைப் பல்கலைக்கழகம்)
ஓமான் [illegible]



தோற்றம்:
14 - 11 - 1955

மறைவு:
31 - 10 - 1990

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், தகப்பன், மனைவி, மகன்,
சகோதர, சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

இல-7 [illegible] லேன்,
கொக்குவில், மேற்கு.
கொக்குவில்.
[16950]

---

# A/L விலங்கியல்

## திரு K. சிவபாதம்.

(விலங்கியல் பாட விதான ஆலோசகரும், புத்தக எழுத்தாளரும், ஓய்வு பெற்ற கொத்தணி அதிபரும்);

★ யாழ் நகரில் மீண்டும் மகத்தான ஆசிரியரின் கற்பித்தல்

சனி - ஞாயிறு

A/L 92 - 8 00 தொகுதிகள் - மன்சுூடு
A/L 91 - 9. மீட்டல் - வினா விடை

(18 பாட நேரங்களில் (01 - 06 - 91 தொடக்கம் 28 - 07 - 91 வரை) முழுப்பாடத்திட்டமும் கற்பித்து முடிக்கப்படும்)

ஆரம்பம்: 01 — 06 — 1991

BOND கல்வி நிறுவனம்,
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4117]

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
12 - 8 - 1956

அநியாய அழிப்பில்:
17 5 - 1984

திதி:
31 - 5 - 1991



## அமரர் தம்பிராசா தெய்வேந்திரம் (குட்டி)

குலவிளக்கே நீ அணைந்தாய்
அழுகிறோம் உன் நினைவால்
வேரோடு மரம் புரண்டு
வீதியிலே வீழ்ந்தது போல
பாழும் வீதியிலே எம்மைவிட்டு
[illegible] தீயிலே சென்றுவிட்டீர்
மின்னலென நீர் மறைந்து
ஏழாண்டு சென்றிடினும்
உன் உறவை மறப்போமோ
மறக்கும் நெஞ்சம் உண்டோ!

இவர் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், நண்பர்கள்.

சோம்பசீத்துறை.
வல்வெட்டித்துறை.
[4106]

---

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

## A/L 91 Day Classes

சகல பாடங்களும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
2 ஆம் பிரிவு ஆரம்பம்: 03 06 1991

Spoken English with Grammer
புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 06 - 1991
காலை 8 மணி
[பி-0026]

---

வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்
உங்கள் அபிமான

# ★ ஷகி சலூன் ★

லேடிஸ் அன் ஜென்ஸ்

மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஏ. ஜி டான் சிகை அலங்காரத்தில் மேலும் பல தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொண்டு திரும்பி உள்ளார்.

596/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
[16940]

---

உ

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் வைகாசி திங்கள் 20 ஆம் நாள் (3-6 1991) திங்கட்கிழமை பகல் 1-50 — 2-40 வரை அமைந்த கன்னி லக்கின சுப முகூர்த்தத்தில்

| எமது திருநிறை செல்வன் | எமது திருநிறை செல்வி |
| --- | --- |
| சந்திரமோகன் | சிவகௌரி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |
| (Registered Pharmacist) | |

மணமகன் இல்லத்தில் நிகழும் திருமாங்கல்யதாரணம் வைபவத்திற்கு உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
மணமகனை இல்லத்தில் 4 6 1991 செவ்வாய் வரவேற்புபசாரம்.

திரு சி. சந்திரசேகரமும்
பாரியாரும்
R; M. C. Rtd Jaffna
அன்பகம்
இணுவில் மேற்கு, இணுவில்.

திரு. திருமதி ச. நமசிவாயம்
குடும்பம்
அம்பிகா டிஸ்பென்சரி
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
[16905]

---

# Accountancy Classes

## (Nov. - Dec. 1991)

| | | |
| --- | --- | --- |
| C. I. M. A. | — STAGE I | - ஆரம்பமாகிவிட்டது. |
| | — STAGE II | - 09-06-1991 |
| A. A. T LONDON & SRILANKA | — (ALL STAGES) | - 01 - 06 - 1991 |
| I. A. B. | — FOUNDATION | - ஆரம்பமாகிவிட்டது. |
| | — INTER | - 01 - 06 - 1991 |
| | — FINALS | - 09 - 06 - 1991 |

விபரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**
(Result Oriented Institute in North)
14, St. Peters Lane,
Hospital Road, Jaffna
[பி-0021]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தெரிவுக் குழுவா?

இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று புதிதாக யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கட்சி தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வரவும் முடிவு செய்திருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒருவராக ஓர் ஆசனத்தை எவ்வாறு கைப்பற்றிக் கொள்ளும் அளவுக்கே மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. தலைவர் போலவே தனக்கு [illegible] இவர் [illegible] எழுதும் பேசியும் வருபவர். தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு எதிரானவர். அவர்களுக்கு சில சலுகைகளை வழங்கித் திருப்திப்படுத்திவிட வேண்டும் என்ற பொதுவான சிங்களத் தலைவர்களின் பிரதிநிதிகளில் ஒருவர்.

கடந்த 35 வருடங்களாக பல குழுக்கள், ஆணைக்குழுக்களை வைத்தும், ஒப்பந்தங்கள் செய்தும் தமிழர் பிரச்சினையை எந்தச் சிங்களத் தலைவராலும் தீர்க்க முடியாமற் போய்விட்டது.

வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு என்று எத்தனை எத்தனை வைத்தும் காலம் நீடித்ததே அன்றி பிரச்சினைக்குரிய அடிப்படைத் தீர்வுதானும் வகுக்கப்படவில்லை; கண்டறியப்படவில்லை; எட்டப்படவில்லை.

இந்தக் குழுக்கள், மாநாடுகள் எல்லாம் உள்ளதையும் கெடுத்து. தீர்வை ஒரு கற்பனைப் பொருளாக்கிவிட்டன. ஜே. ஆர். காலம் தொடக்கம் பிரேமதாசா காலம் வரை மாறி மாறித் தொடர்ந்து வருடக்கணக்காக அனைத்துக் கட்சி மாநாடுகள் நடந்த போதிலும், தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்ட முடிந்ததா? ஆண்டுகள் சேர்ந்தது மட்டும் கட்டிய அதையாகத் தொடர்கிறது.

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை, அவர்களின் பிறப்புரிமைகளை சரிவரப் புரிந்து கொள்ள முடியாதவர்களால், புரிந்து கொள்ள மறுப்பவர்களால் எப்படி பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்? நித்திரை செய்பவனை தட்டி எழுப்பலாம். நித்திரை போலப் பாசாங்கு செய்பவனை எப்படி எழுப்புவது?

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழக்கமான நடைமுறைகள் பயனில்லை. அரசாங்கமும் தமிழர்களின் உரிமைக்காகப் போராடுவோரும் நேரடியாகப் பேச வேண்டும். அதுவும் வெற்றி தர வேண்டுமானால் பிரச்சினை நியாயமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற கருணை மனம் அந்தப் பக்கத்தில் அவசியம்.

வேண்டுமானால் —

தமிழர்கள் ஏற்கக் கூடிய, அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவல்ல ஒரு புதிய தீர்வை இனங்காணுவதற்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஒன்று கூடிச் செயற்படட்டும். பழைமாடுகள் பூட்டிய வண்டி போல அல்லாமல், ஒரே திசையில் அவை சென்றால் அதுவே இனப் பிரச்சினைக்குத் தீர்வை உண்டாக்குவதற்கான ஆரம்பப் புள்ளியாக அமையும்.

### இன்டர்போல் உதவும்

புதுடில்லி, மே 31

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக இந்திய புலனாய்வுத் துறையினர் இன்டர்போலின் (சர்வதேசப் பொலிஸ்) உதவியை நாடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 31

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் வெளியிட்டுள்ள "பரணி பாடுவோம்" புதிய பாடல் ஒலிப்பதிவு நாடா, தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டு வரிசையில் "தமிழீழ எழுச்சிப் பாடல்கள்" தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். நந்தனார் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். (இ)

# பிரிட்டிஷ் தூதர் கிளாட்ஸ்ரோன் விரும்பப்படாத நபராக பிரகடனம்

## இலங்கை அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, மே 31

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் திரு டேவிட் கிளாட்ஸ்ரோனை விரும்பப்படாத நபராக இலங்கை அரசு பிரகடனம் செய்துள்ளது.

தென்பகுதியில் நடந்த 11 ஆம் திகதி நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலின் போது, திக்குவல்லையில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் வாக்களித்துவிட்டு, தமது கைவிரலிலுள்ள மையை அழித்துவிட்டு, மீண்டும் வாக்களித்தனர் என்றும் —

இவ்வாறான தேர்தல் முறைகேடுகள் பரவலாக அந்தப்பகுதி வாக்களிப்பு நிலையங்களில் இடம் பெற்றன என்றும் — திரு கிளாட்ஸ்ரோன் திக்குவல்லை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் தூதர் உள்நாட்டு விடயங்களில் தலையிடுகிறார் என்றும் —

ராஜதந்திர நெறிமுறைகளை அவர் மீறி விட்டார் என்றும், ஆளும் ஐ.தே. கட்சி வட்டாரங்கள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்தன.

இந்த விஷயம் தொடர்பாக ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவும், பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

வெளியுறவுச் செயலாளர் பேர்னட் திலகரத்தின லண்டன் சென்று பிரிட்டிஷ் வெளியுறவு துணை அமைச்சரையும் சந்தித்து இலங்கையின் ஆட்சேபத்தைத் தெரிவித்தார்.

இப்போது திரு கிளாட்ஸ்ரோனை இலங்கையில் விரும்பப்படாத நபராக பிரகடனப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

இத்தகவல் நேற்று நடைபெற்ற அமைச்சரவை வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### கார்க்குண்டு வெடிப்பில் 9 பேர் பலி

மட்றிட், மே 31

ஸ்பானிய நகரமான பார்ஸிலோனாவில் நேற்று காலை கார்க்குண்டொன்று வெடித்த போது குறைந்தது 9 பேர் கொல்லப்பட்டனர்.

60 கிலோ குண்டு வைக்கப்பட்டிருந்த இந்த வாகனம், நகரக் காவலர்களின் குடியிருப்புப் பகுதியில் மூன்று மாடிக் கட்டடத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குண்டு வெடிப்பில் அக்கட்டடம் தரைமட்டமானது.

சுதந்திரத்துக்காகப் போராடும் பாஸ்க் இனத்தவரின் இயக்கமான "எட்டா" இக்குண்டு வெடிப்புக்கு காரணமாக இருந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

அடுத்த ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் பார்ஸிலோனாவில் நடைபெற உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### ராஜீவின் மரணம் குறித்து ஆரூடம் கூறியவர்!

புதுடில்லி, மே 31

ராஜீவ் காந்தி தான் அடுத்த பிரதமர் என கருத்துக் கணிப்புகள் கூற, "த அஸ்ட்ரொலஜிக்கல் மகஸின்" சஞ்சிகையின் இணை பாசிரியை திருமதி சுபத்ரி தேவி வசுதேவ் மட்டும் ராஜீவ் யும் முடிவுக்கு வந்துவிட்டதாக கடந்த மார்ச் 16 ஆம் திகதியே கூறிவிட்டார்.

இந்தாலவை இம்மாத நடுப்பகுதியில் வெளியான ஆங்கில மாத (ஜூன்) "த அஸ்ட்ரொலஜிக்கல் மகஸீன்" சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

அச்சஞ்சிகையில் வெளியான சம்பந்தப்பட்ட பகுதி வருமாறு:

தேசியத் தலைவர் ஒருவரின் மரணம் நாட்டை துயர சாகரத்தில் ஆழ்த்தும், வன்செயல் பரவும் ஆபத்து இல்லை என்று சொல்ல முடியாது.

மத்தியில் அதிகார பலம் குறித்து அதிக மாற்றங்களை இடைக்காலத் தேர்தல் ஏற்படுத்தும்.

இந்திரா காங்கிரஸ் புதிய யுகம் ஒன்றைக் காணும். பெரும்பாலும் ராஜீவ் யுகம் முடிந்து விட்டது என்றே சொல்லலாம்.

இப்படி காலஞ்சென்ற வாசுதேவ் மார்ச் 16 இல் உலக சைவசார இந்திய நிலையத்தில் நடந்த கூட்டத்தில் பேசியிருந்தார். (இ-எ)

### காங்கிரஸை காப்பாற்றுமாறு

## சோனியாவிடம் கெஞ்சிய சிரேஷ்ட உறுப்பினர்!

புதுடில்லி, மே 31

காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றும்படி திருமதி சோனியா காந்தியின் காலடியில் காந்தித் தொப்பியை வைத்து காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கெஞ்சினார்.

இந்தத் தகவலை 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ராஜீவ் கொலையுண்ட பின்னர், சில தினங்கள் கழித்து காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் திருமதி சோனியா காந்தியைச் சந்தித்தார்.

தனது தலையில் இருந்த காந்தித் தொப்பியை கழற்றி சோனியா காந்தியின் காலடியில் வைத்த அவர், கட்சியைக் காப்பாற்றும்படி சோனியா காந்தியைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் சோனியா தனது காலடியில் வைக்கப்பட்ட காந்தித் தொப்பியை எடுத்து, அதை அந்த காங்கிரஸ் பிரமுகர் கையிலேயே ஒப்படைத்தார் என்றும் —

கட்சியைக் காப்பாற்றும்படி விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து சோனியா கருத்து எதுவும் தெரிவிக்காமல் அந்த இடத்தை விட்டு அகன்றார் என்றும் 'இந்து' செய்தி கூறுகிறது. (இ-எ)

## ராஜேந்தர் - ஜெயலலிதா பர்கூரில் நேரடிப் போட்டி

சென்னை, மே 31

தர்மபுரி மாவட்டம், பர்கூர் சட்டசபைத் தொகுதியில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுக்கும் திரைப்பட இயக்குநர் — நடிகர் டி. ராஜேந்தருக்கும் இடையேதான் பிரதான போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தொகுதியில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த திரு. சுகவனம் திரு. ராஜேந்தருக்கு ஆதரவாக போட்டியில் இருந்து விலகிக்கொண்டார் என்பது தெரிந்ததே.

திரு. சுகவனம் போட்டியில் இருந்து விலகிக்கொண்ட செய்தி ஏற்கனவே வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### இரி கடித்து மரணம்

தென்மராட்சி, மே 31

இரி கடித்ததற்கு ஏற்புத் தடைமருந்து போடாத ஒருவர் ஏற்புவலியால் இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் நடந்த செவ்வாய்க்கிழமை நாவற்குழியைச் [illegible] பற்றிய [illegible] பெயர் தெரியவில்லை. (இ-எ)

### 78 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மே 31

சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி அவர்களின் 78 ஆவது நிறைவு தின மங்கல விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி ஆன்மீக சித்தராக இவ்வுலகில் வாழ்ந்து கொண்டு மக்களின் சரீர ஆன்மீக நலனுக்காக வேண்டுதல்களை அருவழி மார்பாக அன்பர்களுக்கு நல்கி வரும் அருட்தொண்டினைப் பாராட்டி இவ்விழா எடுக்கப்படுகிறது. (ஜீ-எ)

### முல்லைத்தீவில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன்னங்கள் மூவர் வீரமரணமடைந்தனர்.

இம் மோதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

★ ஏ.கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி - 1
★ அதற்குரிய மகஸின் - 1
★ ரவைக் கோர்வை - 528
★ ரி 81 ரக துப்பாக்கி - 2
★ அவற்றிற்குரிய மகஸின் - 5
★ ரி. 56 ரக துப்பாக்கி - 1
★ அதற்குரிய மகஸின் - 4
★ நடுத்தர ரவைகள் - 1200
★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் - 2
★ தொலைக்காட்டி - 1

லெப்டினன்ட் பிரகாஷ் (சங்கர் இளங்கோ விவரன் - வவுனியா), லெப்டினன்ட் நாம் (செல்லத்துரை தேவராஜ்) மயூரன் (கிளிநொச்சி) ஆகியோரே வீரமரணமடைந்தனர். (உ-3)

### பிரிட்டன் ஸ்ரீலங்கா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக கிளாட்ஸ்ரோன் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஸ்ரீலங்கா அரசு பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரியிருந்தது என்றும் —

அக்கோரிக்கையை பிரிட்டிஷ் அரசு ஏற்க மறுத்ததைத் தொடர்ந்தே திரு கிளாட்ஸ்ரோனை நாட்டை விட்டு வெளியேறும்படி கொழும்பு அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளாட்ஸ்ரோன் நாட்டை விட்டு வெளியேற ஸ்ரீலங்கா அரசு கால அவகாசம் விதிக்கவில்லையெனினும், அவர் மிக விரைவில் தாயகம் திரும்புவார் என்று பி.பி.சி. நேற்று இரவு அறிவித்தது.

மனித உரிமை மீறல்கள் பற்றி கடந்த சில ஆண்டுகளாக தூதர் கிளாட்ஸ்ரோன் பகிரங்கமாக விமர்சனம் தெரிவித்து வந்ததற்கும் —

அவரை தற்போது நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டதற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்பகுதியில் சுமார் 60 ஆயிரம் பேர் வரை கடந்த சில ஆண்டுகளில் கொல்லப்பட்டும் காணாமற் போயும் உள்ளனர் என்று ஐரோப்பிய சமூக அமைப்பு தெரிவித்திருந்தது.

இம் மனித உரிமை மீறல்கள் குறித்து தூதர் கிளாட்ஸ்ரோன் வெளிப்படையாக கண்டனம் தெரிவித்து வந்தார் என்று குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் —

கொழும்பில் உள்ள தூதர் கிளாட்ஸ்ரோனை நாட்டை விட்டு வெளியேறும்படி ஸ்ரீலங்கா அரசு உத்தரவிட்டதற்கு காரணம் ஏதும் இல்லாதது என்று லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு பேச்சாளர் நேற்று தெரிவித்தது.

ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைக்கு எதிராக பதில் நடவடிக்கை பிரிட்டன் மேற்கொள்ளும் என்றும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு மேலும் கூறியது.

உள்ளூராட்சித் தேர்தலின் போது பிரிட்டிஷ் தூதர் மேற்கொண்ட நடவடிக்கையை ஸ்ரீலங்கா அதிகாரிகள் தவறாக சித்தரித்து செய்தனர் என்றும் பிரிட்டிஷ் வெளியுறவு அதிகாரி ஒருவர் சொன்னார். (உ-எ-3)

### பேச்சு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவிதம் வருமாறு!

கே: தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் அவர்களுடன் உங்கள் உறவு நிலை எப்படியிருக்கும்?

ப: கருணாநிதி வெல்லலாம்; ஜெயலலிதா வெல்லலாம். யார் வென்றாலும் தமிழக அரசுடன் தொடர்ந்து நல்லுறவை வளர்க்க முயற்சிப்போம்.

கே: வவுனியா, மன்னாரில் ஸ்ரீலங்கா அரசு குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றிகளைப் பெற்று பலமான நிலையில் இருந்து கொண்டு தான் அரசு பேச்சுவார்த்தைக்கு முன் வந்துள்ளது?

ப: மன்னார், வவுனியாவில் அவர்களுக்கு பலத்த இழப்பு எமது பிரதேசத்தை அவர்கள் கைப்பற்ற முடியவில்லை. எமது பொருளாதாரத்தை நாசமாக்கியது தான் அவர்கள் செய்த வேலை. எமது பொருளாதாரத்தை அழித்து. இராணுவ மேலாதிக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசு பேச வந்தால் நம் யோசத் தயாரில்லை.

கே: பேச்சுவார்த்தை தொடங்கி அது வெற்றி பெற்றால் எத்தகைய தீர்வை ஏற்பீர்கள்?

ப: எத்தனையோ இழப்புகளுக்கு மத்தியில் இரத்தம் சிந்தி எமது அடிப்படை இலட்சியத்துக்காக — மக்களுக்காக போராடி வருகிறோம். எமது மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் எந்தத் தீர்வையும் பரிசீலிக்க நாம் ஆயத்தமாகவுள்ளோம். (உ-3)

### அரசு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறார் விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்களை நடத்துவதில் காலதாமதம் ஏற்படலாம்'' — என்று ஜனாதிபதி பிரேமதாசாவின் வெளியுறவு ஆலோசகர் பிராட்மன் வீரக்கோன் நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (உ-எ 3)

### மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பொதுமக்களை கைது செய்தனர். அவர்களில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர். ஒருவர் முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

மட்டக்களப்பு நகருக்கு பொருள்கள் வாங்கச்சென்ற இருதயபுரத்தைச் சேர்ந்த தம்பிராசா ஆனந்தராசா [illegible] பவரும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-3)

### பெண் கைது

சென்னை, மே 31

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக மதுரையில் ஓர் இளம் பெண் நேற்று சென்னையில் கைது செய்யப்பட்டார்.

ராஜீவ் காந்தியின் அஸ்தி கலசம் சென்னை ரயில் நிலையம் ஒன்றிற்கு கொண்டு வரப்பட்ட போது இப்பெண் சந்தேகத்துக்கிடமான முறையில் அங்கு நடமாடினார் என்றும் —

அவர் கைதானபோது அவரிடம் செல்லுபடியற்ற கடவுச்சீட்டும், வெளிநாட்டு முகவரிகள் அடங்கிய டயறி ஒன்றும் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர் வவுனியாவைச் சேர்ந்த சாந்தினி (30 வயது) என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### வீடு சோதனை

சென்னை, மே 30

சென்னை நகரில் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தங்கியுள்ள வீடுகள் தமிழ்நாடு பொலிஸாரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane Jaffna.

தூய பிரயோக கணிதம்
திரு. கிருஷ்ணா

91 A/L தொகையீட்டின் பிரயோகம் 8-00 மணி
புவியீர்ப்பு மையம் - 9-00 மணி
92 A/L - நுண்கணிதம் - 12 00 மணி
- காவிகள் - 1-00 மணி

ஆரம்பம்: 02 - 06 - 91 ஞாயிற்றுக்கிழமை
[இ/0022]



கலை, வர்த்தகக் கல்லூரி
(C. C. A.)
வெலிங்டன் சந்திக்கருகாமையில், யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு: A/L 92
ஆரம்பம் 01 - 06 - 1991
காலை 8- 00 மணி

DAY CLASS
ஆரம்பம்: 03 - 06 - 1991
காலை 8- 00 மணி

[இ 0019]


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### இராசகோபால் மங்கையர்க்கரசி

தோற்றம்: 4-4 1925 மறைவு: 17-4-1991

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகவும், பாசத்தின் உறைவிடமாகவும், எங்களுக்கெல்லாம் நல்வழி காட்டி, நல்வாழ்வு வாழ வைத்து, எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு பிரிந்த, எமது அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் இல்லத்தில் இன்று [31-5-1991] அன்னாரது சபிண்டீகரண கிரியை காலை 11-00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொள்வதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ச. இராசகோபாலும், மக்களும்.

186/6, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

[C/0031]

# போராட்டத்துடன் இணைந்து ஊழியர் செயற்படவேண்டும்

## செயலகத்தில் நடந்த கூட்டத்தில் மாத்தையா

அரச ஊழியர்கள் போராட்டத்துடன் இணைந்து செயற்படவேண்டும். போராட்டகாலத்தில் போராட்டத்தை விட்டு விலகி வெளியே நிற்காமல் தமது கடமைகளை மக்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா [மாத்தையா].

நேற்று யாழ். செயலகத்தில் நூற்றுக்கணக்கான கிராம சேவை அலுவலர்கள் மற்றும் அரச ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் வைத்து கிராம சேவை அலுவலர்களது பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் திரு. மாத்தையா கேட்டறிந்து கொண்டார்.

[ஒ-5]

## ஆயிரம் குடிசைகள் கொண்ட அகதி முகாம் அரியாலையில்!

யாழ் மாவட்டத்தில் நிரந்தர அகதி முகாம் ஒன்றை அமைக்க ஆறுலட்சம் கோடி ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளால் அடிக்கடி இடம்பெயரும் மக்களை தங்க வைப்பதற்கு வசதியாகவே இந்த ஆயிரம் குடிசைகள் கொண்ட முகாம் அமைக்கப்பட இருக்கிறது.

நாவற்குழி, அரியாலை, கைதடிப் பகுதிகளில் ஆயிரம் குடிசைகள் கொண்ட இந்த அகதி முகாம் அமைக்கப்படும்.

[ஒ-3]

## ஆந்திராவில் நிலக்கண்ணி; பொலீஸ் வாகனம் சிதறியது

### ஏ. எஸ். பி. ஒருவரும் உயிரிழப்பு

ஹைதராபாத், மே 31

ஆந்திரா மாநிலத்தின் காக்கி நடாப் பகுதியில் நக்ஸலைட்டுக்கள் நடத்திய நிலக்கண்ணி தாக்குதலில் பொலீஸ் வாகனம் ஒன்று சிதறியது.

அதில் பயணம் செய்த பிரதி பொலீஸ் அத்தியட்சகர் (ஏ. எஸ் பி) ஒருவரும் கான்ஸ்டபிளும் ஒருவரும் அப்போது கொல்லப்பட்டனர்.

இன்னொரு தாக்குதலில் ஒரு கான்ஸ்டபிளும் ஒரு ஊர் காவல் படை வீரரும் கொல்லப்பட்டனர்.

[ஒ-எ]

## நோயாளரை பதிவுசெய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 31

கொழும்புக்கு சிகிச்சை பெற செல்லவுள்ள நோயாளிகள் அனைவரும் இக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கு சமூகம் கொடுத்து கப்பலில் செல்வதற்காக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யப்பட்டவர்கள் மட்டுமே பதிவு செய்யப்படுவர் என்றும்—

நோயாளர்கள் கட்டாயம் நேரில் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

[ஒ 15]

## என். ரீ. ராமராவ் உண்ணாவிரதம்

ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சரும் தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவருமான திரு என் ரி ராமராவ் நேற்று காலவரையறையற்ற உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

ராஜீவின் கொலையை அடுத்து மாநிலத்தில் இடம்பெற்ற வன்முறைபற்றி விசாரணை நடத்தி நட்டஈடு வழங்க வேண்டும் என்று கோரியே ராமராவ் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்.

[ஒ-எ]

## திருமுறை விழா

யாழ்ப்பாணம், மே 31

அகில இலங்கைத் திருமுறை மன்றத் திருமுறைப் பெருவிழாவின் இரண்டாம், மூன்றாம் நாளை நிகழ்ச்சிகள் முறையே இன்றும், நாளையும் நடைபெற உள்ளன.

இன்றைய விழா நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

நாளை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் நல்லை ஆதீனத்தில் காலை இடம்பெறவுள்ளன.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் சொற்பொழிவுகள், திருமுறை ஓதுதல், சங்கீதரங்கு என்பன இடம்பெறும். திருமுறைச் சுவடி ஊர்வலமும் விழா ஆரம்பத்தில் நடைபெறும்.

[அ]

## வெடி விபத்தில் போராளிகள் மூவர் மரணம்

யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவுப் பகுதிகளில் இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்து சம்பவங்களில் மூன்று போராளிகள் மரணமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் - உதயன் [தி. தவராசா — கிளிநொச்சி], திருகோணமலை - கல்மடுவில் - பல்லவன் [...... இராசலிங்கம் - மூதூர்], யாழ்ப்பாணத்தில் மேஜர் சுருளி [கந்தசாமி சிறிதரன் - மானிப்பாய்] ஆகியோர் இறந்த மூவரும் ஆவர்.

[ஒ-3]

## குழந்தை பலி!

தென்மராட்சி, மே 31

தமக்கையுடன் கோவில் குளத்தில் குளிக்கச் சென்ற மூன்று வயதுப் பெண் குழந்தை தாமரைக் கொடியில் சிக்கி பலியானது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவிலில் இடம்பெற்றது.

கைலாசநாதர் சர்மா ...... (சிவகுரு) வின் குழந்தையே இவ்வாறு ...... [ஒ-13]

## காசோலை

யாழ்ப்பாண நகருக்குச் சற்றுத் தொலைவில் கண்டெடுக்கப்பட்ட காசோலை ஒன்று உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொலைத்தவர் உரிய அத்தாட்சிகளைத் தெரிவித்து அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அடையாள அட்டையுடன் தவறாது நேரில் வர வேண்டும்.

## ஒன்று கூட...

யாழ்ப்பாணம், ...

யாழ். பல்கலைக்கழ... மலர்ச்சிக் கழகத்தி... ஆரம்பிக்கப்படவுள்ள... களுக்கான சுய ... வாய்ப்புப் பயிற்சி... திற்கு தங்கள் பெய... பதிவுசெய்து கொண்ட... நாளை மு. ப. 10-00 ... மறுமலர்ச்சிக் கழகத்... தில் ஒன்று கூடுமாறு ... பட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## அ. சிவஞானம்

அ. சிவஞானம் 25-5-91 அன்று காலமா... இவர் காலஞ்சென்ற அகத்தியர் சின்னப்பு (மல... பென்சனியர்) யின் அன்பு மகனும், சி நவரட்ணரா... (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர், சாவகச்... சி. திசவீரசிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத நி... அதிபர்), S சிவபாதசேகரம் (ஓய்வு பெற்ற ... விஞ்ஞானி, கொழும்பு), S அம்பிகா இரட்ணம் ... யோரின் அன்புச் சகோதரரும் S துஸ்யந்தன் தே... அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கி... கள் 25-5 91 அன்று பி.ப. 5 30 மணியளவில் கொ... புத்துறை (துண்டி) இந்து மயானத்தில் நடை... றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ... பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்பிகா இரட்ணம் (சகோ...)
113/1, கொழும்புத்துறை [16...

## அம்பலவாணர் நன்னித்தம்...

[பேப்பர் அப்பா]

சுளிபுரம் மேற்கைச் சேர்ந்த முன்னாள் வீர... பத்திரிகை ஏஜண்டும், முன்னாள் சுளிபுரம் ... சேவையாளர், உப தலைவருமான அம்பலவா... நன்னித்தம்பி காலமானார்.

அன்னார் திருமதி நாகம்மாவின் அன்புக் ... கும், திருமதி ரஜனி (பிரான்ஸ்), சிவகுமார் (பிரா... இரத்தினகுமார் (பிரான்ஸ்), குமுதினி (ஆசிரி... வுனியா மருதோடை த. க பாடசாலை), ச... ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிர... (பிரான்ஸ்) மாமனாரும், கௌதமி (பிரா... சத்தியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் ... மாவார். அன்னாரின் ஈமக்கிரியை 31-5 91 ... ளிக்கிழமை பி. ப 2 மணிக்கு நடைபெற்று ... நிலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்ப... இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்ப... ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சுளிபுரம் கிழக்கு, த பூலோகராசா (பே...
சுளிபுரம். [1...

## சின்னத்தம்பி மீனாட்சிப்பிள்...

காரைநகர் இடைப்பிட்டி சுப்பிரமணியம்... வைச் சேர்ந்த சின்னத்தம்பி மீனாட்சிப்பி... (30-5-91) நேற் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோ. சின்னத்தம்பி... களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இ ... நாதன், சிவபாக்கியம், தவபாக்கியம், ஆகி... அன்புத் தாயாரும், இ அன்னபூரணம், வே. நட... அ. நடராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ...

அன்னாரின் பூதவுடல் அளவெட்டி கேணி... கரையைச் சேர்ந்த செ. சச்சிதானந்தம் (கிராம... அலுவலர்) அவர்களின் இல்லத்திலிருந்து (31... இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 00 மணி... அளவெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்ல...

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்... அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு... கிறோம்.

தகவல்
கேணிக்கரை, சி. பிரபாக...
அளவெட்டி. [16865] [பேரன்...

## நவரட்ணம் மதியழகன்

(காரைநகர் யாழ்டன் கல்லூரி மாணவ...

காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த ... சலம் நவரட்ணம் — கமலாதேவி தம்பதிகளின்... புதல்வனும், யாழ்டன் கல்லூரி மாணவனு... மதியழகன் நேற்றிரவு காலமானார்.

அன்னார் கிரதன், சந்திரன், குகனிமக... யோரின் சகோதரரும், செல்லாச்சிப்பிள்ளையி... னும், நமசிவாயத்தின் பேரமகனும், சுப்பிர... (உரிமையாளர் விநாயகர் ஸ்ரோர்ஸ்), கு... செல்லையா (உரிமையாளர் குகன் ஸ்ரோர்ஸ்) ... ரின் மருமகனும் ஆவர்.

இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 ... 144/3 சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்... தில் நடைபெற்று பூதவுடல் ஈமக்கிரியைக... கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்... படும்.

தகவல்:- அ நம...

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 05 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org